Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.35/2022**

**2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 07-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | பேக்ட்ரி வேலை |
| பெயர் | - | விக்டர்அந்தோனி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சாமிவேல் | சமயம் | - | |
| கிராமம் | - | தாய்முடி | வயது | - | 55 |
| சாதி | - | | | | |

**07.03.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் தாய்முடி 1-டிவிசனில் உள்ள டீபேக்ட்ரியில் வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு எங்க வீட்டிற்கு பக்கத்தில் ஒரு கோயில் , டீக்கடை உள்ளது. அங்கு சத்தம் கேட்டது. வெளியில் வந்து பார்க்கும்போது இதுமாதிரி சம்பவம் நடந்தது. சரத்தும், மணிகண்டனும் குமாரிடம் சிகரெட் கேட்டுள்ளார்கள். இல்லை என்று சொன்னவுடன் வாக்குவாதம் நடந்தது. அப்ப அங்கு இருந்த ஸ்டூலை எடுத்து அடித்ததால் சத்தம் கேட்டு நான் வந்தேன். யார் ஸ்டூலால் அடித்தார்கள் என்று தெரியாது.

2. 20-ம் தேதி சம்பவம் நடந்தது. 21-ம் தேதி கையெழுத்து போட்டேன். போலீசார் வந்து சாட்சி கையெழுத்து கேட்டார்கள் போட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜரிலுள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ. 2 ஆகும்.**

3. தற்போ து என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ. 3 ஆகும்.** ஏட்டையா வந்தார். என்ன நடந்தது என்று கேட்டார். கையெழுத்து போடச்சொன்னார். போட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி**

**வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**1.** கடந்த 09.11.2020 அன்று 13.10 மணிக்கு முடீஸ் போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்தனர் அதற்கு சாட்சியாக இருந்து நானும், சுரேஷ் என்பவரும் கையொப்பம் போட்டுக் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.

2. கடந்த 09.11.2020-அன்று 14.15 முதல் 14.40 மணிவரை வாசக சாலை எஸ்டேட் கேண்டின் தாய்முடி, முடீஸ் என்ற சம்பவயிடத்திலிருந்து மரப்பலகையான நாற்காலி ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றுவதற்கு சாட்சியாக இருந்து நானும், சுரேஷ் என்பவரும் கையொப்பம் போட்டுக் கொடுத்துள்ளோம் என்றால் ஆமாம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. இந்த வழக்கு சம்பந்தமாக நான் நேரடியாக எதையும் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.